இலங்கை ஸ்ரேட் டிரேடிங் (ஜெனரல்) கோர்ப்பரேசன் லிமிட்டட் கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கம்பனியின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புரைகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையின் (''பணிப்பாளர் சபை'') பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையினையும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் போன்றே நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தலையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களில் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான இலங்கை ஸ்ரேட் டிரேடிங் (பொது) கோர்ப்பரேசன் லிமிட்டட் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.2 ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் என்னால் தெரிவிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்வின் நோக்கெல்லையும் வரம்புகளும் முன் கூறப்பட்டவாறு அமையும்.

(ஆ) கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டதுடன், எனது பரிசீலனைக்குத் தென்படும் விதத்தில் கம்பனியானது முறையான கணக்கீட்டுப் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணியுள்ளதென்பதும்,

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவினது தேவைகளுக்கேற்ப இணங்கியுள்ளதென்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் அரசாங்க மானிய மீதியாக ரூபா 41,468,114 காட்டப்பட்டிருந்தபோதும், 20 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 39(அ) பந்தியின் பிரகாரம், அரசாங்க மானியங்கள் தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் தெரியப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு நிகரானவையாகக் காட்டப்பட வேண்டிய வரம்பைக் கட்டியெழுப்பும் கணக்கில் (Build up Margin Account) உள்ள ரூபா 190,933,790 மீதியானது வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 6(2) பந்தியின் பிரகாரம், காணி விற்பனையால் பெறப்படும். மூலதன இலாபத்திற்கு வட்டி செலுத்தப்பட வேண்டுமென்பதால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட காணிகளை மீள மதிப்பீடு செய்து அதனால் உருவாகும் மிகையினால் ஏற்படும் தாக்கத்தை வருடாந்த நிறுத்தி வைத்த வரிக் கணிப்பீட்டின்போது கவனத்திற் கொள்ள

வேண்டுமாயினும், கம்பனிக்குரிய காணி சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) போலிச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 802,208 பெறுமதியான மென் முறைமையினது பெறுமதி சிறு கருவிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பிணை வைப்பாகக் கணக்கிலிடப்பட வேண்டிய ரூபா 625,000 சிறு கருவிகள் மற்றும் உபகரணங்களாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கேற்றவாறான வருடாந்த பிரசாரத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறாமல் மீளாய்வாண்டின்போது பிரசார செலவினமாக ரூபா 5,044,701 தலைவர் / பொது முகாமையாளரது அங்கீகாரத்துடன் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினத்தில் ஏறக்குறைய 50 சதவீதம் கம்பனியின் உற்பத்தி மற்றும் சேவை மேம்பாட்டுடன் தொடர்பற்ற பல்வேறு நிறுவனங்களது ஞாபகார்த்த விழா மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவினம் என மேலும் அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1 2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 20 உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படியாக ரூபா 3,060,000 மீளாய்வாண்டின்போது வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 3.3 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், ஒதுக்கப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவருக்கு போக்குவரத்துப் படி கொடுப்பனவு செய்யப்படலாகாதெனினும், ஒதுக்கப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்தும் 2 |

உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படியாக ரூபா 460,000 மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 68,658,203 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 39,988,886 ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 71 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 28,669,317 அதிகரிப்பை நிதிப் பெறுபேற்றில் சுட்டிக்காட்டுகின்றது. விற்பனை வருமானம் ரூபா 585,509,922 அதிகரித்தமையே இதற்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் கம்பனியின் வரியின் பின்னரான தேறிய இலாபம் 2013/2014 ஆம் நிதியாண்டில் ரூபா 50,687,678 ஆகவிருந்து 2014/2015 ஆம் நிதி ஆண்டில் குறைவடைந்து மீண்டும் 2015/2016 ஆம் நிதியாண்டில் படிப்படியாக அதிகரித்து 2017/2018 ஆம் நிதியாண்டில் ரூபா 68,658,203 ஆகியிருந்தது. ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, தேய்மானம் என்பவற்றை நிதிக் கூற்றுக்களில் மீளச் சீராக்கல் செய்கையில், 2013/2014 ஆம் நிதியாண்டில் ரூபா 345,907,882 ஆகவிருந்த கம்பனியின் பங்களிப்பு 2014/2015 ஆம் நிதியாண்டில் குறைவடைந்து அடுத்த ஆண்டு முதல் படிப்படியாக அதிகரித்து 2017/2018 ஆம் நிதியாண்டில் ரூபா 521,452,661 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் தொலை நோக்கையையும் பணியையும் நிறைவேற்றுவதன் பொருட்டு 3 ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்திருந்தபோதும், அதற்குரிய செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகளும் மீளாய்வும்

பல்வேறு வகையான பொருட்களின் விற்பனை, சர்வதேசச் சந்தையில் நிலவும் கீர்த்தி மிக்க விற்பனை நாமத்தை எமது நாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தல், வருமானத்தையும் இலாபத்தையும் அதிகரித்தல், அரச துறையினதும் நுகர்வோர் தேவைகளையும் வினைத்திறனுடன் நிறைவேற்றுதல், பதவியணியினரின் அபிவிருத்தி என்பவற்றினூடாக பெறுபேறுகளை அபிவிருத்தி செய்தல் என்பன கம்பனியின் பிரதான நோக்கங்களாகும். அதற்கமைய, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வண்டினது மொத்த இலாபத்தை 19.7 சதவீதத்தால் அதிகரித்துக் கொள்வதில் தேர்ச்சியடைந்திருந்தபோதும், 10 விற்பனை பிரிவுகளில் இரசாயனப் பொருள் பிரிவும் தீர்வையற்ற கடைகள் ஆகிய பிரிவுகள்

இரண்டினதும் 66 சதவீத பங்களிப்புடனேயே அவ்வதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன் ஏனைய பிரிவுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்படவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

தொழில்நுட்ப அபிவிருத்திச் சபையினது கொள்வனவுக் கட்டளை ஒன்றின் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட கையிருப்புத் தொகையை அந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்குத் தாமதம் ஏற்பட்டமையால் களஞ்சிய வாடகையாக ரூபா 367,400 செலுத்தப்பட வேண்டியேற்பட்டது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 329 ஆகும். உள்ளவாறான பதவியணியினரது எண்ணிக்கை 440 ஆகும். அது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினருக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முறையான அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் கூடுதலாக 221 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட 110 பதவிகளுக்குப் பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) மூன்று பிரதி பொது முகாமையாளர் பதவிகள், 02 உதவிப் பொது முகாமையாளர் பதவிகள், 04 முகாமையாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தமையானது தீர்மானங்களை மேற்கொள்வதிலும் மேற்பார்வை நடவடிக்கைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

### 4.4 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம், அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கம்பனியின் பதவியணியில் உள்ள 9 உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். மேலும், மீளாய்வாண்டின்போது அப்பதவியணியினருக்கு சம்பளமும் படியுமாக ரூபா 2,078,721 கம்பனியால் வழங்கப்பட்டிருந்தபோதும், அச்செலவினத்தை அமைச்சிடமிருந்து மீளப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.5 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கம்பனிக்குரிய ராஜகிரியவில் அமைந்துள்ள 198 பார்ச்சர்ஸ் உடைய ரூபா 67,900,000 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய காணி மற்றும் ரூபா 15,000,000 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 20000 சதுரஅடிக் கட்டிடம் என்பன அநேக ஆண்டுகளுக்கு முன்னர் வெலிசரையில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் கட்டிடம் ஒன்றுடன் பரிவர்த்தனை செய்யப்பட்டிருந்தது. அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிடம் பரிமாற்றம் செய்யப்பட்ட திகதி மற்றும் அதற்குரிய உடன்படிக்கை அல்லது ஏனைய சட்டபூர்வ ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) இக்காணியும் கட்டிடமும் சதொச தலைவரால் அச்சமயமிருந்த வரிசை அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரது அறிவுறுத்துரையின்படி 2011 ஆம் ஆண்டில் சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், தற்சமயம் அது பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால்

பயன்படுத்தப்பட்டவாறுள்ளது. மேலும், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் (சதொச) 1999 ஏப்ரல் தொடக்கம் 2002 நவம்பர் வரை வாடகையாகக் கம்பனிக்குக் கொடுப்பனவு செய்த கூட்டுத் தொகை ரூபா 6,720,000 ஆகும். அதன் பின்னர் வாடகை செலுத்தப்படவில்லை. எனினும், கம்பனி சொத்தைத் திருப்பியளிக்குமாறு அவ்வவ்போது கோரிக்கை விடுத்திருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2018 யூலை 26 வரை அது திருப்பியளிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இக்கட்டிடத்தின் பொருட்டு கம்பனி மீளாய்வாண்டில் தீர்வை வரியாகச் செலுத்தியிருந்த தொகை ரூபா 299,250 ஆகும்.

(இ) மேற்படி காணியில் அமைந்துள்ள 02 கடைகளை சதொச வெளி நபர்களுக்கு வாடகைக்கு வழங்கியிருந்தது. அதற்குரிய வாடகையைப் பெறுவதற்குக் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) இக்காணியும் கட்டிடமும் கம்பனிக்கு உரியதாகியபோதும், கம்பனியின் இட வசதி பற்றாக்குறை காரணமாக கிராமிய பொருளாதார அமைச்சிற்குரிய நாரஹேன்பிட்ட கட்டிடம் ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. 2013 யூன் முதல் 2018 மார்ச் வரை அதன் பொருட்டு ரூபா 14,582,700 வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், இலங்கை ஸ்டேட் டிரேடிங் (பொது) கோர்ப்பரேசன் லிமிட்டட் கம்பனி மீளாய்வாண்டின் பொருட்டு தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களும் வருடாந்த அறிக்கையின் வரைவும் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2017/2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 செப்டெம்பர் 13 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 4 பதவியணியினருடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு பணிகளை பூர்த்தி செய்வதற்கு அப்பதவியணியினர் போதுமானமாக அமையவில்லை.

### 6.3 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி நாரஹேன்பிட பொருளாதார நிலையத்தில் மூன்று இடங்களை (07, 08, 10A இலக்க) காட்சியகங்களுக்கும் களஞ்சியத்திற்குமென வாடகைக்குப் பெற்றிருந்ததுடன், அது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏழாம் இலக்க இடத்திற்கு 2017 சனவரி தொடக்கம் கணக்காய்வுத் தினமான 2018 ஆகஸ்ட் 31 வரை மாதாந்தம் ரூபா 207,180 வீதம் ரூபா 4,143,600 வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், இரு சாராருக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை.

(ii) எட்டாம் இலக்க இடத்தைக் காட்சியகமாகப் பயன்படுத்துவதற்கு உசிதமானவாறு தயாரிப்பதற்கு கம்பனி ரூபா 272,740,141 செலவிட்டிருந்தது. அத்தொகையை கட்டிட வாடகையிலிருந்தோ அல்லது மீள அறவீடு செய்வதற்கோ நிபந்தனைகள் எதுவும் உடன்படிக்கையில் உட்படுத்தப்படவில்லை.

(ஆ) யாழ்ப்பாணத்தில் விற்பனைக் கூடத்தை நடாத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கக் கட்டிடத்தின் 01 ஆம் 02 ஆம் இடங்கள் 2014 ஏப்ரல் 01 தொடக்கம் 2019 மாரச் 31 வரை 05 ஆண்டுகளுக்கும் 03 ஆம் இலக்க இடம் 2014 நவம்பர் 01 முதல் 2017 ஒக்டோபர் 31 வரை 03 ஆண்டுகளுக்கும் பெறப்பட்டிருந்தன. மாதாந்த வாடகையாக ரூபா 40,000 கொடுப்பனவு செய்யப்படுவதற்கான உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முதலாம், இரண்டாம் இலக்க இடங்களுக்கு கட்டிட உரிமையாளருக்கு முற்பணமாக ரூபா 960,000 வழங்கப்பட்டிருந்தபோதும், முற்பணத்தைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அதற்குரிய நிபந்தனையும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

(ii) மூன்றாம் இலக்க இடத்திற்கு ரூபா 480,000 முற்பணமாகக் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. முற்பணத்தைத் தீர்வு செய்யாது உடன்படிக்கைக் கால முடிவில் குறித்த இடத்தை திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 6.4 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கம்பனியின் முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் காரணமாக கம்பனி திருத்தங்களை மேற்கொண்டிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை | | பந்தியுடனான தொடர்பு | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | 2015/16 | 2.2.1(இ) | ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கிய குளிரூட்டி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,756,220 அறவிடப்படாமை |
| (ஆ) | 2015/16 | 4.3(ஆ) | விவசாயிகளின் தேவைகளை இனங்காணாது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 75,171,712 பெறுமதியான 35 நடமாடும் களஞ்சியங்களை (கொக்குன்) விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | 2016/17 | 2.2(அ)(I) | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அருகதையற்ற 21 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,180,000 போக்குவரத்துப் படியாக வழங்கப்பட்டமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016/17 | 2.2(அ)(II) | உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தும் 02 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 480,000 போக்குவரத்துப் படியாக வழங்கப்பட்டமை |
| (உ) | 2016/17 | 2.2(அ)(III) | அங்கீகாரமின்றி 2 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த எரிபொருள் வரம்பிற்கு அதிகமாக எரிபொருள் செலவினத்திற்கான மீளளிப்பாக ரூபா 728,588 வழங்கப்பட்டமை. |
| (ஊ) | 2016/17 | 4.2 | அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கம்பனியின் 10 பதவியணியினர் வரிசை அமைச்சில் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு கம்பனியால் சம்பளமும் படியுமாக ரூபா 2,157,700 வழங்கப்பட்டமை. |

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் நடைமுறைகளையும் விதிமுறைகளையும் விட முன்னைய பாவனையின் அடிப்படையிலேயே கணக்குகளைத் தயாரித்தல். |
| | | (ii) தற்போதுள்ள முகாமைத்துவத் தகவல் முறைமைகள் நாளதுவரையாக்கப்படாமை |
| | | (iii) கணக்கீட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்படாமை |
| | | (iv) கடன் மீதியை குறுகிய கால மற்றும் நெடுங்கால ரீதியில் வகைப்படுத்தாமை. |
| (ஆ) | உள்ளகக் கட்டுப்பாடு | முறையாக ஆவணப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை இல்லாமை |
| (இ) | பொருட் கொள்வனவு | சில பொருட் கொள்வனவு வழிகாட்டிகள் கடைப்பிடிக்கப்படாமை |
| (ஈ) | கையிருப்புக் கட்டுப்பாடு | கையிருப்புக் கட்டுப்பாட்டையும் கையிருப்பு அறிக்கைகளையும் பேணுவதில் நலிவு நிலவுதல். |
| (உ) | வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் | நெடுங்காலமாக நிலுவையாக உள்ள வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் அறவிடப்படாமை |
| (ஊ) | நிதி முகாமைத்துவம் | காசு மிகை, நிலையான வைப்புகளில் இடப்படுதல், நிதித் தேவைகளுக்கு குறுகிய கால கடன்களைப் |

பெற்று வட்டியைச் செலுத்துதல் என்பன